**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**
**TIRUVANNAMALAI**

**OS. No. 131/2021**

**Date: 05.03.2025**

**பி.வா.சா. 1 இந்துமதி க/பெ. அய்யப்பன்**

**சத்திய பிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை –**

(1) எனது கணவருக்கும் வாதி மாதவனுக்கும் எத்தனை வருடங்களாக பழக்கம் என்று கேட்டால் 01.07.2015 ல் இருந்து பழக்கம். என் கணவர் அரசு பதவியில் இருந்தார் என்றால் சரிதான். நான் இல்லத்தரசி ஆவேன். தாவா வீடு என் கணவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், அதை நாங்கள் இருவரும் சேர்ந்து அனுபவித்து வந்தோம் என்றால் சரிதான். அந்த வீட்டை கிரையம் கொடுப்பதற்காக 01.07.2015 ல் நானும் என் கணவரும் சேர்ந்து வாதியுடன் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரிதான். அந்த ஒப்பந்தத்தின்படி ரூ. 9 லட்சத்திற்கு கிரையம் பேசி நாங்கள் ரூ. 5 லட்சம் முன்பணம் பெற்றோம் என்றால் சரிதான். அந்த கிரைய தொகையை வைத்து டூரிஸ்ட் தொழில் செய்யலாம் என்று நாங்கள் விற்க முடிவு செய்தோமா என்று கேட்டால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. நாங்கள் டூரிஸ்ட் வண்டிகள் எதையும் வாங்கவில்லை. அதன்பின்னர் இந்த வீட்டை கிரையம் கொடுக்க விருப்பம் இல்லையென்று சொல்லி நாங்கள் வாங்கிய முன் தொகையை வட்டியுடன் வாதிக்கு செலுத்திவிட்டு 01.09.2016 ம் தேதியன்று கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்தோம் என்றால் சரிதான். 01.09.2016 ம் தேதியன்றே நானும் என் கணவரும் வாதியுடன் ரூ. 9 லட்சத்திற்கு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டு ரூ. 8 லட்சம் முன்தொகையை பெற்றுக்கொண்டோம் என்று சொன்னால் ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டது உண்மைதான். அந்த கிரையத்தொகை மற்றும் முன்பணம் பற்றி எனக்கு தெரியாது. என் கணவர் நிர்வாகம் செய்ததால் அவருக்கு தான் தெரியும். 01.09.2016 ம் தேதியிட்ட கிரைய ஒப்பந்தத்தில் "பயண சுற்றுலா பேருந்து " வாங்க அந்த வீடை விற்பதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அந்த ஒப்பந்தத்தில் என் கணவர் ரூ. 8 லட்சம் முன் பணம் பெற்றதாக உள்ளது என்றால் சரிதான். என் கணவர்

அரசு பதவியில் இருந்ததால் எல்லா விவரங்களையும் பார்த்து சரியாக செய்வார் என்றால் சரிதான்.

(2) பின்னர் 15.11.2017 ல் என் கணவர் தாவா வீட்டை கிரையம் கொடுக்க விருப்பம் இல்லையென்று சொல்லி அந்த இரண்டாவது கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 ரத்து பத்திரத்தில் நாங்கள் வாங்கிய முன் தொகையை வாதிக்கு திரும்ப செலுத்திவிட்டதாக உள்ளது என்றால் சரிதான்.

(3) அதே தினம் (15.11.2017) ல் நானும் என் கணவரும் தாவா வீட்டை கிரையம் கொடுக்க மற்றொரு ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டு அதில் ரூ. 15 லட்சம் பிரதிபலன் என்றும், நாங்கள் ரூ. 14 லட்சம் முன் தொகையை பெற்றுக்கொண்டோம் என்றால் சரிதான். அந்த ஒப்பந்தத்தை 11.02.2019 ம் தேதியன்று இரத்து செய்துவிட்டோம் என்றால் சரிதான்.

(4) அதே தினம் (11.02.2019) ல் நானும் என் கணவரும் தாவா வீட்டை கிரையம் கொடுக்க மற்றொரு ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டு அதில் ரூ. 26 லட்சம் பிரதிபலன் என பேசி நாங்கள் ரூ. 25,75,000/– லட்சம் முன் தொகையை பெற்றுக்கொண்டோம் என்றால் என் கணவர் பெற்றுக்கொண்டார். அந்த ஒப்பந்தத்தில் உள்ள அம்சங்கள் உண்மை என்பதால் தான் நான் கையொப்பம் செய்தேன் என்றால் என் கணவர் சொன்னதால் நான் கையொப்பம் செய்தேன். அந்த ஒப்பந்தத்தில் காலக்கெடு 1 வருடம் என்றால் சரிதான். அதன்பின்னர் தாவா சொத்தை கிரையம் செய்து கொடுக்குமாறு வாதி என் கணவரிடம் பலமுறை கேட்டார் என்றால் சரிதான். என் கணவர் வாதிக்கு கிரையம் செய்து கொடுக்கவில்லை என்றால் சரிதான். ஒப்பந்தத்தில் உள்ள 1 வருட காலம் முடிந்தபின்னர் என் கணவர் வாதிக்கு ஒரு சட்ட அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அந்த 11.12.2020 தேதியிட்ட சட்ட அறிவிப்பில் ஒப்பந்தத்தில் கண்ட காலகெடு தான் முக்கியமானது என்றும், அந்த காலக்கெடுவிற்குள் வாதி கிரையம் பெற முன்வராத காரணத்தினால் என் கணவர் அந்த ஒப்பந்தம் இரத்தாகிவிட்டது என்று கூறியுள்ளார் என்று சொன்னால் சரிதான்.

(5) வாதியுடன் ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்ட நாங்கள் உரிமையாளர்கள் என்ற வகையில் நாங்கள் தான் கிரைய ஆவணம் தயார் செய்திருக்கவேண்டும் என்றால் எனக்கு தெரியாது.

30.06.2021ல் வாதியின் மீது மாவட்ட குற்றப்பிரிவில் நானும் என் கணவரும் சேர்ந்து ஒரு புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். அந்த புகாரை எதற்காக கொடுத்தோம் என்று கேட்டால் வாதியிடம் வாங்கிய தொகைக்குரிய வட்டியை நாங்கள் செலுத்திய பின்பும் அவர் எங்களை தொடர்ந்து வட்டி கேட்டு வற்புறுத்தியதால் கொடுத்தோம். நாங்கள் வா.சா.ஆ.2 ஒப்பந்தத்தின் அடிப்படையில் வாங்கிய ரூ. 25,75,000/- முன்பணத்தை வாதிக்கு கொடுக்காமல் ஏமாற்றுவதற்காக தான் வாதியின் மீது குற்றப்பிரிவில் புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. சொத்தை விற்பதற்காக தான் தாவா சொத்தின் மூலப்பத்திரமான வா.சா.ஆ.1 ஆன என் கணவர் பெயரில் இருந்த தானப்பத்திரத்தை வாதியிடம் ஒப்படைத்தோம் என்றால் எனக்கு அதைப்பற்றி எதுவும் தெரியாது. வாதி வழக்கில் கோரிய பரிகாரத்திற்கு உரியவர் என்றும், நாங்கள் தாவா சொத்தை வாதிக்கு கிரையம் செய்து கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றும் என் கணவர் இறந்துவிட்டதால் வழக்கு அம்சங்கள் அனைத்தும் தெரிந்துகொண்டு தற்போது தெரியாதவாறு பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாகவேண்டுமென்றால் சரியல்ல.

**Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.**

**Sd/-B.C.Gopinath.,M.L.,**
**Additional District Judge,**
**Tiruvannamalai.**